திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த கடனாய்வு (சிரிப்பு), புலனாய்வுக்கு எடுத்துக்கொண்ட வழக்குகளில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சொசைடியில் தருமபுரி சொசைடி, பொட்னேரி சொசைடி இரண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இம்மாதிரியான புலனாய்வு செய்வதில் எவ்வளவு வழக்குகள் நிரூபணம் ஆகி இருக்கிறது? வழக்குத் தொடரத் தகுதியுள்ள வழக்குகள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த வினா எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றியும் அல்ல. அவர்கள் சொல்வதுபோல் கடன் வழங்கும் சங்கங்கள், அல்லது புலனாய்வு பற்றிய விவரங்களைப்பற்றித் தனி வினா போடப்படுமானால், அதிலே எத்தனை வழக்குகளில் தீர்ப்பாகி இருக்கிறது, எத்தனை இன்னும் புலனாய்வில் இருக்கின்றன என்று சொல்ல முடியும். அது நீண்ட பட்டியலாக இருப்பதால், அதை அச்சிட்டு மேஜைமீது வைக்கத் தயாராக இருக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : May I know what is the total amount involved in this case?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Even the information about the total amount, Sir, I do not have readily on hand. But if a separate question is put. I will be able to say districtwar or societywar the amount involved.

மதுரை மண்டலப் பகுதியில் கதர் விற்பனை

*444 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70, 1970–71, 1971–72 ஆண்டுகளில், மதுரை காதி மண்டலப் பகுதியில் கதர் கடனாக விற்றதில் பாக்கியுள்ள தொகை எவ்வளவு?

(இ) இதில் வசூலிக்க முடியாது என்று தள்ளுபடி செய்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ரூ. 30,09,038-21.

(இ) ஏதுமில்லை.

1973 மார்ச் 20]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த காதி ஸ்திராயலத்திலிருந்து சமீபத்தில் இந்த சாயில்ட் சூட்ஸ் என்று சொல்லி விற்கப்பட்டதே சென்னையில் நடந்த எக்சிபிஷனில், எவ்வளவு விற்கப்பட்டது, அதற்காக மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்ததா என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: அது பற்றிய கேள்வி அல்ல இது. இன்னும் அதனுடைய கணக்கு என்னிடத்தில் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: சார், மதுரை காதி மண்டலப் பகுதியில் மட்டும் ரூ. 30 லட்சம் என்று கூறினர்கள். அதுபோல் மாநிலம் முழுவதற்கும் எடுத்துக்கொண்டால், எவ்வளவு லட்சம் இருக்கும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மதுரையைப்பற்றி மட்டும் கேட்டு இருந்தார்கள். அதுபற்றிய கணக்கு தான் வைத்து இருக்கிறேன். மாநிலம் பூராவிற்கும் எவ்வளவு என்று கேட்டால் வேறு கணக்குத் தருகிறேன்.

மாதவரத்தில் பனைபொருள்கள் சங்கக் கண்காட்சி

445 வின.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-செங்கற்பட்டு மாவட்ட பனைபொருள்கள் கூட்டுறவு சம்மேளனம் 1970-ஆம் ஆண்டில் மாதவரத்தில் கண்காட்சி ஒன்று நடத்தியதா?

(இ) ஆம் எனில், அதற்கு ஆன செலவு என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

அசோக்நகர்-அமைந்தகரை இணைப்புச் சாலை

* 414 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அசோக் நகரிலிருந்து அமைந்தகரை வரை பெரிய சாலை அமைத்து அதனை பூந்தமல்லி நெடுஞ்சாலையுடன் இணைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?